## தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை - திரு. து. கணேஷ்மூர்த்தி, எம்.ஏ, பி.எட்,

ஓ.மு.எண். 6114 / அ1 / 2021 நாள். 10 .12. 2021

3/1/2022

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி - பணிவரன்முறை - தருமபுரி மாவட்டம் கே.வேட்ரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் **திருமதி. மு. மேகலா** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பாக

பார்வை 1 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் எண் 3406/PSD-12/2019 நாள் 15.02.2020

2 தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3655/அ1/2020 நாள் 18.09.2020

3 அரசாணை எண் 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018

4 கே.வேட்ரப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் ந.க.எண் 91/2021 நாள் 16.10.2021

5 அரூர் மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 1496/அ1/2021 நாள் 15.11.2021

ஆணை

பார்வை (1) இல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவால் 2018-2019 மற்றும் 2019-2020 இல் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் கண்ட தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி தருமபுரி மாவட்டம் கே.வேட்ரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக **21.09.2020 முற்பகல்** பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் **திருமதி. மு. மேகலா** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துருக்களை பார்வை 5 இல் கண்டவாறு அரூர் மாவட்டக் கல்வி அலுவலர் பரிந்துரை செய்து பணிந்தனுப்பியுள்ளார்.

பார்வை (3)இல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், கலம் 2இல் கண்ட பணியாளருக்கு கலம் 4ல் கண்ட நாளில் **பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.**

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி. மு. மேகலா<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப்பள்ளி<br>கே.வேட்ரப்பட்டி, தருமபுரி மாவட்டம் | 21.09.2020<br>முற்பகல் | 21.09.2020<br>முற்பகல் |

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளில் தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட அசல் பணிப்பதிவேடு மற்றும் அசல் கல்விச் சான்றுகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு - பணிப்பதிவேடு அசல் 1 தொகுதி மற்றும் அசல் கல்விச் சான்றுகள்

தலைமை ஆசிரியர்
அரசு மேல்நிலைப் பள்ளி
கே.வேட்ரப்பட்டி-636902
அரூர்(வ), தருமபுரி(மா)

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி

10.12.2021

பெறுதல்

மாவட்டக் கல்வி அலுவலர் அரூர், தருமபுரி மாவட்டம்

நகல் -

1. **திருமதி. மு. மேகலா** இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப்பள்ளி கே.வேட்ரப்பட்டி தருமபுரி மாவட்டம் (தலைமையாசிரியர் மூலமாக)
2. தலைமையாசிரியர் அரசு மேல்நிலைப்பள்ளி கே.வேட்ரப்பட்டி தருமபுரி மாவட்டம்

நகல் பெற்றுக்கொண்டேன்.

மு. மேகலா
3/01/2021